(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(17).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 ஜனவரி 10 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 சனவரி 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

391/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கண்டி தேசிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் மேற்படி மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகளில் அரைவாசிக்கு மேல் மருத்துவமனை இழந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அனுமதியின்றி குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் தொடர்பாக இன்றளவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனுமதியற்ற குடியிருப்பாளர்களை பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு இன்றளவில் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(vi) ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3549/2023

கௌரவ லலித் வர்ண குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை, ஹொரணை மற்றும் மத்துகம ஆகிய ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இன்றளவில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் நியமிக்கப்பட்ட தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுமார் 620 மாணவர்கள் கல்வி கற்கும் களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள களு/அல்-ஹசனியா மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியர் வெற்றிடம் உள்ளிட்டதாக இன்றளவில் 15 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலையில் போதுமானளவு கட்டட வசதிகள் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) கொடைவள்ளல்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி 12 வகுப்பறைகளுக்கும் மேசை மற்றும் கதிரை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3596/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி செயலகத்தில் இயங்கி வருகின்ற விசேட கருத்திட்ட அலகினூடாக 2022.07.14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலகில் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பதவி, சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலகில் பணியாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அரசியல் கட்சியொன்றில் முழுநேர ஈடுபாடுடையவர்கள் என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) மேற்குறித்த அலகினைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3672/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் கடமையாற்றிய அமய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாளர்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நீக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டிருக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர் ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) இவர்கள் நீக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்டிருக்கும் அந்தப் பணியாளர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாது என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர்கள் சம்பந்தமாக இன்றளவில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3707/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2023 ஒக்தோபர் 01 ஆம் திகதியளவில் —

(i) இலங்கையின் அரச பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள், தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை அதிபர்களின் எண்ணிக்கை;

(ii) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், அழகியற்கலை, விளையாட்டு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

(iii) அதிபர் பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

(iv) பதில் அதிபர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிகளவான ஆசிரியர் பற்றாக்குறையும் மிகையும் காணப்படுகின்றதும் அதிகளவான அதிபர் பற்றாக்குறையும் மிகையும் காணப்படுகின்றதுமான இருபது கல்விக் கோட்டங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3713/2023

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 யூலை 01 முதல் 2020 டிசம்பர் 31 வரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட மற்றும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகளின் பெயர்களை வெவ்வேறாகவும்;

(ii) மேற்குறிப்பிட்ட இடமாற்றங்கள், நீதிபதிகள் வழமையாக இடமாற்றம் செய்யப்படுகையில் பின்பற்றப்படும் சாதாரண நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iii) இன்றேல், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3718/2023

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேர் பெறுமதி வரி (VAT) வீதம் அதிகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை அறவிடப்பட்டுள்ள மொத்த சேர் பெறுமதி வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த வருடத்தின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது அவ்வதிகரிப்பு எவ்வளவு என்பதையும்;

(iii) அவ்வதிகரிப்பினுள் பணவீக்கம் காரணமாக அதிகரித்துள்ள சதவீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய வருமான வரி விகிதங்களை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் புதிதாக திறக்கப்பட்டுள்ள வரிக் கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் மூடப்பட்டுள்ள வரிக் கோப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வரிக் கோப்புகள் திறக்கப்பட்ட ஆட்களில், 2023 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உழைக்கும் போது செலுத்தும் வரியின் மூலம் இன்றளவில் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3754/2023

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி, வெலிகெபொல பிரதேச செயலகப் பிரிவின் கலாசார நிலையம் நீண்டகாலமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) அதனை சீரமைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையத்தை சீரமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3774/2023

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் பொருட்டு முன்னர் காணப்பட்ட விஷேட செயலாற்றுகையை அதாவது பதவியுயர்வுக்கான பரீட்சை முறையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக 22/0086/315/003 ஆம் இலக்க மற்றும் 2021.01.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கமைவாக பதவியுயர்வுக்கான பரீட்சை முறையை மீண்டும் அமுல்படுத்தும் திகதி யாதென்பதையும்;

(iii) அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் காணப்படுகின்ற சம்பள முரண்பாட்டை நீக்கி, மேற்படி சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு MN 3 சம்பள அளவுத் திட்டத்தை வழங்குவது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) மேற்படி சேவையில் தற்போது பணியாற்றுகின்ற பட்டதாரி உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) (i) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவை, இலங்கைப் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டு பணியாற்றுகின்ற சிவில் பணியாட்டொகுதியினருக்கும் வழங்குவதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3822/2023

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மக்களுக்கு வசிப்பதற்காக இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் காணியினதும் பெயர், காணியின் அளவு, காணித்துண்டுகளின் எண்ணிக்கை, காணித்துண்டுகளை பகிர்ந்தளித்த திகதி, காணி அமைந்துள்ள கிராமம், கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும் ;

(ii) மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அக்காணிகளுக்கு உறுதிகளை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்காக பணம் அறவிடப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எவ்வடிப்படையில் பணம் அறவிடப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2024 சனவரி 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

426/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தெங்குக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக தாபிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையின் வருடாந்த தெங்கு உற்பத்தியில் வீட்டு நுகர்வு, தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் போன்ற ஒவ்வொரு துறைக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2001ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை, ஒவ்வோராண்டிலும் இலங்கையின் தெங்கு விளைச்சல் தேங்காய்களின் அடிப்படையில் தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) தெங்கு விளைச்சலை அதிகரிக்க, மேற்கூறிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) அந்நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

436/2023

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஒரு கிலோகிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் 400 கிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் —

(i) விற்பனை செய்யப்படும் விலை;

(ii) அவற்றைப் பயன்படுத்தி தயார் செய்யக்கூடிய பால் லீற்றர்களின் அளவு;

(iii) அவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் திரவப்பால் லீற்றர்களின் அளவு;

ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற திரவப்பால் பக்கெட்களின் கொள்ளளவு மற்றும் மேற்படி கொள்ளளவுக்கு அமைய ஒவ்வொரு திரவப்பால் பக்கெட்டின் விலை என்பன தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

694/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு, மட் / பட் / குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் தற்போது பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருப்பதோடு, அந்தப் பாடசாலை முன்னர் அமைந்திருந்த இடத்தில் காணப்பட்ட விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதி இன்றளவில் இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் உள்ளது என்பதையும்;

(ii) அதனால், விளையாடுவதற்காக அந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை இராணுவத்திடமிருந்து மேற்படி விளையாட்டு மைதானத்தை விடுவிக்க எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில், இராணுவத்தின் பொறுப்பில் மேலும் விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை இராணுவத்திடமிருந்து அத்தகைய விளையாட்டு மைதானங்களையும் விடுவிக்க எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

826/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வருடமொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளின் அளவு மெற்றிக் தொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) வருடாந்தம் நுகரப்படுகின்ற மரக்கறிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மரக்கறி உற்பத்தியில் மிகை அல்லது குறை காணப்படுமாயின், அந்த அளவு யாது என்பதையும்;

(iv) 2015 – 2019 வரையான காலப்பகுதியிலும் 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியிலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

839/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறை நிலவுகின்ற கல்வி வலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வொரு பாடத்தின் பிரகாரம் யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

853/2023

கௌரவ காமினி வலேபொட,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அமைவாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென தற்போதைய அரசாங்க முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) தற்போது மத்திய அரசாங்கத்தின் வசமுள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) இதன் காரணமாக தற்போது இலங்கை பொலிஸார் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு உறப்படும் செலவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அவ்வாறு திருத்தப்படும் நிதித்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் தற்போதுள்ள இலங்கை பொலிஸ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்படும் மாற்றங்கள் யாவை;

(ii) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான தத்துவம் நேரடியாக மாகாண பொலிஸாருக்கு உரித்தாகுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

874/2023

கௌரவ ரோஹண பண்டார,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மீன் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மீன் இனப்பெருக்க நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1718/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல்களின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இப்பெறுமதியானது மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களின் சதவீதமாக மேற்படி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கான வெளிநாட்டு பணவனுப்பல்கள் சட்டபூர்வமான வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2020/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் மஹபொல பயிற்சி நிறுவகம் (மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை) இயங்கிவருகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவகத்தினால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறிகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ் ஒவ்வொரு பாடநெறிகளும் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி நிறுவகம் எவ்வாறு பயன்படுத்தப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3799/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கடுகன்னாவையிலிருந்து கம்பளை வரை மின்சார புகையிரதப் பாதையொன்றினை நிர்மாணிப்பதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதா;

(ii) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிக்கையில் கம்பளை, உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கஹட்டபிட்டிய மற்றும் போத்தலபிட்டிய கிராமங்களின் குடியிருப்பாளர்கள் பயன்படுத்தும் தேவராஜ வீதியை உள்ளிட்ட ஏனைய உட்பிரவேச வீதிகள் இழக்கப்படும் அபாயம் காணப்படுவதை அறிவாரா;

(iii) மேற்படி குடியிருப்பாளர்களின் வீடுகள், மகாவலி கங்கைக்கு அருகில் 4, 6 பேர்ச்சஸ் போன்ற சிறிய காணித் துண்டுகளில் அமைக்கப்பட்டுள்ளமையினால், அவர்களது வீடுகள்/சொத்துகள் மற்றும் உட்பிரவேச வீதிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு, மேற்படி பாதையை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், இது சார்பில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் யாவை;

(v) இது தொடர்பில் முன்வைக்கப்படும் மாற்று முன்மொழிவுகள் குறித்து ஆராயப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 சனவரி 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1467/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனைகளில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ள புதிய ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவை நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1515/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில், தற்போது திரைப்படங்கள் திரையிடப்படுகின்ற திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் திரையிடப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1554/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான மூலிகைத் தாவர வகைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை மூலிகைத் தாவரங்களை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மூலிகைத் தாவர வகைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் வருடாந்தம் ஈட்டப்படுகின்ற வருமானம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1585/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கறுவா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை;

(ii) கறுவா சார்ந்த உற்பத்திகள் அதிகளவில் மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை;

(iii) கறுவா பயிர்ச்செய்கைக்கு கன்றுகள் மற்றும் பசளை வழங்கப்படும் அடிப்படை யாது;

(iv) 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கறுவா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1626/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஒக்டோபர் 15 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட ரம்சார் சமவாயத்திற்கு அமைவாக முத்துராஜவெல ஈரநில வலயத்தைப் பாதுகாப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் முத்துராஜவெல ஈரநில வலயத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் தொடர்பில் தரவு முறைமையொன்று பேணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முத்துராஜவெல ஈரநில வலயத்திற்குச் சொந்தமான காணிகளை சட்ட விரோதமான முறையில் நிரப்புவது தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறையான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1648/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(ii) அவற்றில் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அக்கம்பெனிகள் / நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அதிகாரசபை ஈட்டுகின்ற வருடாந்த வருமானம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2402/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்கள் வாழும் வீடுகளை புனரமைப்பதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிதியுதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்நிதியுதவி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நிதியுதவியை பெறுவதற்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிதியுதவியைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் அந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அந்நிதியுதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iv) வீடு இல்லாத சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2697/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மாத்தளை மாவட்டத்தில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மாணவர்களின் எண்ணிக்கையானது விஞ்ஞான, கணித, வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகளுக்கு அமைய சதவீதமாக வெவ்வேறாக யாது;

(iii) மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானவர்களை க.பொ.த. (உயர் தர) விஞ்ஞான அல்லது கணிதப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2883/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, ஜனவரி 26, வெள்ளிக்கிழமை)**

3741/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் “ட” அட்டவணைக்கமைய அமைச்சர்களின் பிரத்தியேக பணியாட்டொகுதி செயலாளர்களுக்கும் அமைச்சுகளுக்கான நிரந்தர செயலாளர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் ஓய்வூதியத்திற்கான உரித்து உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி ஓய்வூதியம் பெறுகின்ற மற்றும் அதற்கென விண்ணப்பித்துள்ள எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட செயலாளர்களுக்கு விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதிய உரித்து மற்றும் ஓய்வூதிய பணிக்கொடை உரித்து வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இணைய வழியூடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அரச நிறுவனங்களிலுள்ள விடயத்துக்குப் பொறுப்பான எழுதுவினைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அது தொடர்பிலான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரது நேரடித் தொலைபேசி இலக்கம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அமைச்சரொருவரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் செயலாளராகவும் பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பணியாற்றிய திரு. சமல் எஸ். பியசுந்தர அவர்களுக்கான ஓய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 82/2024

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,— இலங்கையில் சட்டக் கல்வியின் மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,— 1900 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயற்றப்பட்ட 1900 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டக் கல்விப் பேரவையின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை சட்டக் கல்லூரி தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதுடன் மூன்று பதவிவழி உறுப்பினர்களையும் நீதி அமைச்சரால் நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஏழு உறுப்பினர்களைப் பேரவை கொண்டிருக்கின்ற போதிலும்;

பிரதம நீதியரசர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டத்துறை தலைமையதிபதி ஆகிய மூன்றுபேர்களும் பதவி வழி உறுப்பினர்களாகச் செயற்படுவதோடு, பதவி வழித் தவிசாளராக பிரதம நீதியரசர் செயலாற்றுகின்ற அதேவேளை, சட்டக் கல்லூரியின் அதிபர் காலத்திற்குக் காலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றார்;

அத்துடன் கடந்த இரண்டு தொடக்கம் மூன்று தசாப்த காலப்பகுதியில் கல்லூரியில் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்திருக்கின்ற போதிலும், கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்படவுமில்லை, தேவைப்படும் வசதிகள் வழங்கப்படவுமில்லை என்பதுடன் மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளினூடாகச் சட்டக் கல்லூரியில் கற்பதற்கான அனுமதியினைப் பெறமுடியும்;

(அ) போட்டிப் பரீட்சைகளின் ஊடாக நேரடியான மாணவர் அனுமதிகள்;

(ஆ) உள்ளூர் சட்ட இளமாணிப் பட்டத்தைப் (எல்எல்பி) பின்வரும் பல்கலைக்கழகங்களில் பூர்த்திசெய்த மாணவர்கள்;

- (i) கொழும்பு பல்கலைக்கழகம்
- (ii) பேராதனைப் பல்கலைக்கழகம்
- (iii) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- (iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- (v) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

(இ) சட்டக் கல்விப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் எல்எல்பி பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கும் மாணவர்கள்;

அத்துடன் தற்போது ஏறத்தாழ 7,500 மாணவர்கள் இருக்கின்றபோதிலும், உட்கட்டமைப்பு வசதி பெரும்பாலும் சில தசாப்தங்களுக்கு முன்பு இருந்ததைப் போன்று அதே நிலைமையில் இருப்பதுடன் கல்லூரியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 7,500 ஆக இருக்கின்ற போதிலும் கல்லூரியில் ஒரு நிரந்தர ஆசிரியர் மாத்திர மே காணப்படுவதாலும்;

அத்துடன் சட்டக் கல்வி மற்றும் சட்டக் கல்லூரியின் ஒட்டுமொத்த அலுவல்களின் சீர்திருத்தம் மற்றும் மீள்நோக்கு ஆகியன நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது எஞ்சியிருப்பதாலும்;

அத்துடன் சட்டக் கல்லூரியிலிருந்து பெறும் தொழில்முறைத் தகமைகளுடன் சேர்த்து சட்டத் தொழிலில் நுழைகின்ற தொழில்முறையானவர்களில் இரண்டு வகையினர் காணப்படுவதாலும்;

(அ) சட்டக் கல்லூரியின் மூன்று பரீட்சைகளிலும் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

(ஆ) உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து எல்எல்பி பட்டத்தைப் பெற்றுள்ள சட்டத்தரணிகள் மற்றும் கல்விசார்ந்தும் தொழில்முறை சார்ந்தும் தகைமை பெற்றிருக்கும் சட்டக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

அத்துடன் பல நாடுகளில் கடந்த சில தசாப்த காலங்களில் சட்டக் கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டிருப்பதுடன், சட்டக் கல்விக்கு பல புதிய பாடங்களும் துறைகளும் சேர்க்கப்பட்டிருப்பதாலும்;

சட்டக் கல்வியை விரிவுபடுத்துவதற்கான காலத்தின் தேவை ஒன்று காணப்படுவதுடன் நடைமுறையிலுள்ள தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு புதிய சட்டக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற காரணத்தினாலும் இலங்கையில் சட்டக் கல்வி பற்றிய மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது :—

(அ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கற்கைகள் தொடர்பான அரச கொள்கை மற்றும் சட்டத் தொழில் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் நியமங்களை வகுத்தல்;

(ஆ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கல்வியை ஒழுங்குபடுத்து வதற்கான ஆளுகைச் சபை ஒன்றைத் தாபிப்பதற்கான கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(இ) சட்டக் கல்வி பற்றிய ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் உறுப்பினர்களுக்கான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஈ) பின்வருபவை தொடர்பாகப் பிரயோகிக்கப்படவிருக்கும் செயன்முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல் —

(i) சட்டக் கல்லூரிக்கான அனுமதி மற்றும் அடிப்படைத் தகைமைகள்; அத்துடன்

(ii) சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் நோக்கத்திற்காக சட்டமாணிப் பட்டத்தை அங்கீகரிப்பது தொடர்பாகப் பிரயோகிக்கப் படவிருக்கும் நியமம் ஒன்று.

(உ) நவீன உலகில் பல்வகைப்பட்ட தொழில்முறைத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு கல்வித்தொகுதிகள் தொடர்பான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஊ) சுயாதீனமாகவும் தன்னிறைவாகவும் செயற்படுவதற்கான மாதிரி ஒன்றை அறிமுகப்படுத்துதல்; மற்றும்

(எ) தொழில்முறைச் சட்டக் கற்கைகள் மற்றும் நடைமுறை பற்றிய விருத்தி மற்றும் தரம் ஆகியவற்றிற்கான வேறு ஏதேனும் இடைநேர்விளைவான விடயம்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்திற்கும் (15) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.